உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் 8 | துந்துபி௵ வைகாசிமீ<br>1922௵ மேமீ | இதழ் 2 |
|---|---|---|


உள்ளுறை — பக்கம்.


சிவஞானபோதம் ... ... ... 25
விநாயக ஷஷ்டி விரதம் ... ... ... 27
மாயாவாத மத நிரசனம் ... ... ... 31
சுந்தரவல்லியின் நற்போதனை ... ... ... 35
சமரச ஞானதீபம் ... ... ... 38
சைவக் கிரியாதிகார நிரூபணம் ... ... ... 42
தேவார வைப்புத்தல விளக்கம் ... ... ... 45
'என் கடன் பணி செய்துகிடப்பதே', திருமுல்லைவாயில் வசந்த மகோற்சவம், நன்கொடை ... ... 48


இஃது

தேவகோட்டை

ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களுக்குச்

சமர்ப்பிக்கப்பெறுவது.


பத்திரிகாசிரியர்:

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Military Accts., Department)

நெ. 43, பாளையப்பன் வீதி, எழுகிணறு, சென்னை.



சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

1922.

தபாற்கூலி உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்றரை.

# திராவிட மாபாடியம்

என்னும்

# சிவஞான பாடியம்

முற்றிலும் வெளிவந்து விட்டது.

ஞான சாத்திரங்க ளெல்லாவற்றிற்கும் தலையாய தாய் நூலாகிய சிவஞான போதத்திற்கு மாதவச் சிவஞான சுவாமிகள் அருளிச்செய்த மாபாடிய உரையில் சில பாகங்களே இதுகாறும் அச்சிடப் பெற்றிருந்தன. இப்போது மாபாடிய முற்றிலும் ஆறுமுக நாவலர் அச்சுக்கூடத்தில் அச்சிடப் பெற்றுள்ளது. இதின் விலை ரூ. 5—0—0. வேண்டுவோர் சென்னை, தங்கசாலை வீதியில் 300-வது நெ. நாவலர் வித்தியாநுபாலன அச்சுக்கூடத்திலேனும், சிதம்பரம் நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையிலேனும் தாமதமின்றிப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

---

# திருவூறல் ஆலய தரும பரிபாலன சபை.

இச்சபை தேவாரம் பெற்றிருப்பதும், தக்கோலம் என வழங்கப்படுவதுமாகிய திருவூறலில் ஸ்ரீமத் சொக்கலிங்க சுவாமிகளால் தாபிக்கப் பெற்றுள்ளது. இதில் தக்கோலத் தலவாசிகளும் பிறருமாகப் பலர் கூடி சிவபுராண படனமும் தேவார பாராயணமும் செய்கிறார்கள்.

இத்தலத்தில் தொன்று தொட்டுப் பாதாள கங்கை திருநந்திதேவர் திருவாயினிடமாக வெளிப்போந்து சிவபிரானை வலம் வருவதாகிய அற்புதம் இன்றும் காணப்படுகிறது. இத்தகைய அருமையான சிவதலத்தில் ஆலயம் தரிசிக்கச் செல்வோர் தலையில் இடிந்து விழக் கூடிய அவ்வளவு கிலமாயிருந்தும், இதைச் சீரணோத்தாரணம் செய்ய இதுகாறும் யாருக்கும் புண்ணியம் வாய்க்காமலிருப்பது அதிசயமே. சிற்சில ஆலயங்களுக்கே ஏராளமாகப் பணச் செலவு செய்து இடைவிடாமல் திருப்பணி நடத்தும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் இதை இதுகாறும் கவனியாதிருப்பது வருந்தத்தக்கதாம்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்

| மலர் | துந்துபி௵ வைகாசி௴ | இதழ் |
| --- | --- | --- |
| 8 | 1922௵ மே௴ | 2 |


### திருநேரிசை

கரும்பினு மினியான் றன்னைக் காய்கதிர்ச் சோதியானை
இருங்கட லமுதந் தன்னை யிறப்பொடு பிறப்பிலானைப்
பெரும்பொருட் கிளவியானைப் பெருந்தவ முனிவரேத்தும்
அரும்பொனை நினைந்தநெஞ்ச மழகிதா நினைந்தவாறே.

---

## சிவஞானபோதம்

### பன்னிரண்டாஞ் சூத்திரம்

(3-வது பக்கத் தொடர்ச்சி)

### முதலாம் அதிகரணம்

**செம்மலர் நோன்றாள் சேரலொட்டா அம்மலங் கழீஇ.**

(இ - ள்.) செங்கமல மலர்போல் விரிந்து விளங்கிய முதல்வனது சீபாதத்தை அணைதற்கு உடம்படாது அயர்த்தலைச் செய்விக்கும் அவ்வியல்பினையுடைய மும்மல வழுக்கை ஞான நீராற்கழுவி (எ - று.)

இதில், 1 - வது—தன்னாற் கூறப்படும் பொருள் :—சீவன் முத்தர் மும்மலங்களையுங் களைதல் வேண்டும்.

2 - வது—ஐயப்பாடு—சீவன் முத்தரான பிறகு மலங்களைக் களைதலும் வேண்டுமோ.

3 - வது—பிறர் கூறும் பக்கம்—ஏகனாகி இறைபணிநின்று உண்மை ஞானத்தை யடைந்தார்க்கு மலமாயை தன்னொடு வலிய கன்ம மலமும் இல்லாதொழிதலினால், அம்மலங்களால் மறுபடியும் செய்யக்

கடவதொன்றில்லை. ஆதலால் சீவன் முத்தர் மும்மலங்களைக் களைய வேண்டுவதில்லை.

4 - வது—மறுத்துரைக்குஞ் சித்தாந்தத் துணிபு—ஏகனாகி இறைபணி நின்று உண்மை ஞானத்தை படைந்தார்க்கு எல்லா மலங்களும் கழிந்தொழியினும், உடம்புள்ளளவும் பிராரத்த வினையொன்று மாத்திரம் அவர் உடம்பை யொட்டி நிற்கும். அவ்வினை, பெருங்காயம் வைத்திருந்த பாண்டத்தில் பெருங்காயம் இல்லாதபொழுதும் அதன் வாசனை தங்கியிருந்து அப்பாண்டத்தைத் தாக்குதல்போல், ஒவ்வொரு சமயத்தில் முற்பழக்க விசேடத்தால் வந்து தாக்கும். அப்படித் தாக்குங்கால், செய்கையின் வழியாகவே அப்பிராரத்த வினையின் அநுபவமும் நிகழுமாதலினாலும், அச்செய்கையும் விருப்பு வெறுப்புக்களின் வழியாக நிகழுமாதலாலும், விருப்பு வெறுப்புக்கள் உண்டாகவே பாமே பார்த்திருந்த சீவன் முத்தர்க்கு நிலம் முதல் மாயாதத்துவ மீறாகிய ஏகதேசப் பொருள் காட்சிப்படும். அவை காட்சிபடவே, அவற்றைச் சுட்டியறிவதாகிய விபரீத உணர்வு மேற்பட்டு மெய்யுணர்வைக் கீழ்ப்படுத்திப் பிறவிக்கு வித்தாம். இவ்வாறு விருப்பு வெறுப்புக்களைச் செய்யும் கன்மமலமும், பிரபஞ்சப் பொருளைத் தோற்றுவிக்கும் மாயாமலமும், விபரீத உணர்வு மேம்படச் செய்யும் ஆணவமலமும் ஆகிய மூன்றும் பிராரத்த வினை காரணமாக நிட்டையினின்றும் நீங்கிய சமயம் பார்த்து வந்து கூடும். ஆதலால் சீவன் முத்தர்களும் மும்மலங்களைக் களைதல் வேண்டும்.

### 5 - வது - இயைபு - உதாரண வெண்பா.

புண்ணிய பாவம் பொருந்துமிக் கான்மியமும்
மண்முதல் மாயைகாண் மாயையுங் — கண்ணிய
வஞ்ஞானங் காட்டுமிவ் வாணவமு மிம்மூன்றும்
மெய்ஞ்ஞானிக் காகா விடு.

(இ - ள்.) புண்ணிய பாவம் பொருந்தும் இக்கான்மியமும் = புண்ணிய பாவங்களைப் பயக்கும் விருப்பு வெறுப்புக்களாய்ப் பொருந்துகின்ற இக்கன்ம மலமும்—மண்முதல் மாயைகாண் (இம்)மாயையும் = மண்முதல் மாயாதத்துவ மீறாய்க் காணப்படுகின்ற இம்மாயா மலமும்—கண்ணிய அஞ்ஞானம் காட்டும் இவ்வாணவமும் = சுட்டியறிவதாகிய விபரீத உணர்வைப் பயக்கும் இவ்வாணவ மலமும்—இம்மூன்றும் மெய்ஞ்ஞானிக்கு ஆகாவிடு = என்னும் மும்மலங்களும் மெய்ஞ்ஞானியாகிய உனக்கு ஆகா. ஆதலால் இவற்றை விடுத்தொழிக (எ - று.)

முன்னர்க் கன்மமலமும், கன்மமலங் காரணமாக மாயாமலமும், மாயாமலங் காரணமாக ஆணவ மலமும் வந்து கூடும் என்பதை யறிவித்தற்பொருட்டு இச்செய்யுளில் முதலில் கன்மமலத்தையும், இரண்டாவது மாயாமலத்தையும், மூன்றாவது ஆணவமலத்தையும் கூறினார்.

---

## விநாயக ஷஷ்டி விரதம்

முன்தொருஞான்று சர்வலோகைக நாயகராகிய சிவபிரான் உலக மாதாவாகிய உமாதேவியாருடன் திருக்கைலாயத்தின் கண்ணேயுள்ள திருக்கோயிலில் வீற்றிருக்குஞ் சமையத்தில், விட்டுணு அங்குச் சென்று எம்பெருமானை வணங்கி அவரநுமதி பெற்று ஓருசாரிருந்தார். அப்பொழுது ஈசன் ஒரு திருவிளையாடலைத் திருவுளத்துன்னி, திருமாலைச் சான்ருக இருத்தி, இறைவியுடன் கவருடி, ஈற்றில் தாமே தோல்வியுற்றும் இறைவியை நோக்கி "யாம் வென்றேம், நீ தோற்றனை" என்ருர். உமாதேவியார் மனம் பொருராய் "யானன்ரே வென்றேன், தேவரீர் தோல்வியுற்றீர்" எனக் கூறிச் சான்ருய்நின்ற திருமாலை நோக்கி "வென்றவரியாவர்" என வினவலும், கரியாயிருந்த திருமால் "வென்றவர் ஈசனே" என்ருர். தேவியார் வெகுண்டு நிகழ்ந்த விவகாரத்தைக் கண்ணுற் பிரத்தியட்சமாகக் கண்டும் பொய்க்கரி யுரைத்தனை யாதலின், கண்ணனே, குருட்டுப் பாம்பாகுதியெனச் சபித்தனர். விட்டுணு அது கேட்டு உளம் நடுநடுங்கி எம்பெருமானை யிறைஞ்சி நிற்றலும், எம்பெருமான் "மாலே, நீ பெற்ற சாபம் எம் மூத்த குமாரனல் விமோசனமாகும்" என்றருள, திருமால் அவரைப் பின்னரும் வணங்கி அவ்விடம் விட்டகன்ருர். (என்ன அற்புதம், சூதாடியவர்கள் பரமனும் பரையுமாம். பரம்பொருள் பொருட்டுப் பொய்க்கரி யுரைத்தவர் காத்தற்ருெழிற் கருத்தாவாகிய மகாவிஷ்ணு. அங்ஙனமாகவும், பொய்க்கரி யுரைத்தவரெய்துந் தோஷம் அவரை விட்டகன்றிலது; இதனை எம்போலிய ருணர்ந்துய்யும் பொருட்டுப் போலும் வாக்குமனதீதராகிய சிவபிரான் இத்திருவிளையாட்டைத் தந் திருவுளத்து முன்னினர்). சாபம்பெற்ற திருமால் சர்ப்பமாகத் தென்றிசையிலுள்ள ஒரு பெரிய ஆலமரத்தின் பொந்திற் சென்று சிவபிரானை வணங்கித் தவஞ்செய்து கொண்டிருந்தனர்.

இஃதிங்ஙனமாக, விநாயகப் பெருமான் சிவாஞ்ஞையால், தேவர்கட் கிடுக்கண் விளைத்த கயமுகனைக் கொன்று அமரர்கள் துயர்களைந்து அவர்கள் பூசனைபெற்றுத் திருச்செங்காட்டை யடைந்து சிவலிங்கப்

பெருமானைப் பூசித்து அவ்விடம் விட்டகன்று முசுகுந்தன் குருட்டர வாகக்கிடந்த ஆலவனத்தை யடைதலும், ஐங்கரத் தெந்தை எழுந்தருளுதலாற் பஞ்சாயுதக் கடவுள் தமது தொல்லுருப் பெற்றுப் பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன் சரணவற்புதமலரை விதிப்படி பூசித்தார். விக்கினேஸ்வரர் திருவுளமகிழ்ந்து, அச்சுதமூர்த்தியே, நினக்கு வேண்டியவரம் யாதென விளம்புதி, எனலும் மாயோன் அன்பர்க்கு இட்டசித்திகளை யருளும் ஐங்கரத்தெய்வமே, உம்மைப் பூசித்தமையினால், ஈஸ்வரியால் நேர்ந்த கொடுஞ்சாபம் விமோசனமாகப் பெற்றேன். மார்கழி மாசத்துப் பூர்வபக்கச் சஷ்டியாகிய இத்தினத்தில் விரதமாகத் தேவரீரை யார் பூசித்தாலும் அவர்களுடைய இடர் களைந்து இஷ்டசித்தி யளித்தருளல் வேண்டும்; இதுவே யானிரக்கும் வரம் என்னலும், கரிமுகத்தெந்தையும் அரியின் விண்ணப்பத்திற்குத் திருவுள மிசைந்தனர். இதற்குப் பிரமாணம், கந்தபுராணம் - அனந்தன் சாப நீங்குபடலம்.

விண்ணுமம் புகல்கின்ற திங்கடனின் மிக்கமதி தனிலாறும் பக்கமாகு
மிந்நாளில் யானுன்னை யருச்சித்திட்ட வியற்கைபோல் யாருமினி-மீறிலாவுன்
பொன்னுரு மலரடியே புகலென்றுன்னிப் பூசைபுரிந் திடவுமவர்புன்கணெல்லா
மந்நாளே யகற்றிநீ யுலவாச் செல்வ மளித்திடவும் வேண்டுமிஃதருள்க வென்றான்.

"மாயனுரை கேட்டலு நீ மொழிந் தற்றாக...."

[விண்ணுமம் புகன்ற திங்கள் - தனு மாசமாகிய மார்கழி; மிக்க மதி தனிலாறும் பக்கம் - பூர்வபக்கச் சட்டி; சதயந்தொட்ட சட்டி யென்பர். சதயம் தொட்ட சட்டி விநாயகக்கடவுள் ஓர்கால் திருவவதாரஞ்செய்த காலமாகும். "மற்றை நாளைங்கரமா முகன்பிறந்த, அற்றைநாட் சதயமுமாறும் பக்கஞ்சேரு மத்தினத்தில்;' என வருவதனானுமுணர்க.]

அற்றை நாட்டொடக்கம் இவ்விரதத்தை விண்ணவரும் மண்ணுளோரும் அநுட்டித்து வருவாராயினரெனப் புராணங்களும் பிறவுங் கூறுப. இதுவே விரத வரலாறாகும்.

விரத மனுட்டிக்கு முறை: கார்த்திகை மாசத்துக் கிருஷ்ண பக்கப் பிரதமை முதல் மார்கழி மாசச் சுக்கிலபக்கச் சஷ்டி யீறாக உள்ள இருபத்தொரு நாளும் விநாயகக்கடவுளைக் குறித்து இவ்விரதம் அநுட்டிக்கற்பாலது. விரதமநுஷ்டிப்போர் பிரதமைத் திதியன்று ஆசார சீலராய் விநாயகாலயத்தை யடைந்து வழிபாடாற்றி இருபத்தோரிழை

யாலாய காப்பை ஆடவர்களாயின் வலக்கரத்திலும், மகளிராயின் இடக் கரத்திலும் கட்டிக்கொண்டு, பூசை செய்க. அன்று தொடக்கம் விநாயகக் கடவுளுக்கு விதிப்படி பூசைசெய்தும், செய்தற் கருகரல்லாதவர் அபிடேகத் திரவியங்களும் நிவேதனத்திற்குரிய முக்கனி முதலிய பல பொருட்களும் கொடுபோய்க் கொடுத்துப் பூசை செய்வித்தும், சுவாமி தரிசனஞ்செய்து அன்புடனும் நியதியுடனும் விநாயக புராணம் பிள்ளையார் கதை என்னுமிவற்றைப் படனமேனும் சிரவணமேனுஞ் செய்து, பகற் காலத்தில் ஒரு போதுண்ணல்வேண்டும். சஷ்டி தினத்தில் உபவாசஞ் செய்து விதிப்படி வந்தனை வழிபாடாற்றி அடுத்தநாட் பாரணஞ் செய்து காப்பவிழ்த்துவிடல் வேண்டும். அவிழ்த்த காப்பை வாழைப்பழத்துட் புதைத்துப் பசுவுக்கருத்துதல் வேண்டும்.

அரிபிரமேந்திராதி தேவர்கள் நோற்றமை மாத்திரமன்றி, இவ்விரத மாண்மியத்தை நாரதர் சொல்லக்கேட்ட வச்சிரமாலி என்னும் மன்னன் அநுஷ்டித்துத் தன்னைப் பீடித்து வருத்திய கொடும் பிணி நீங்கப் பெற்றான். உச்செயினி நாட்டைப் பரிபாலித்த விக்கிரமாதித்த வேந்தன் தன் தேவிமாருடன் இவ்விரதத்தை யநுட்டித்து வருநாளில் அவனது காமக்கிழத்தியருள் ஒருத்தியாகிய இலக்கணசுந்தரி யென்பாள் தானும் அநுஷ்டிக்கத் தொடங்கிக் காப்புக்கட்டிச் சிலநாள் நோற்றப் பின்னர் திடபத்தி யில்லாமையால் இடையில் விரதத்தை விடுத்துக் காப்பை யவிழ்த்துப் பட்டகொவ்வைக் கொடிமீது போட்டுச் சென்றாள். கொவ்வைக்கொடி பழைமைபோற்றழைத்தோங்கிப் படர்ந்தது. அப்பொழுது கொவ்வையிலை கொய்யும்படி அங்குச் சென்றவளொருத்தி காப்பைக் கண்டு பரிவுடன் எடுத்துத் தன் இடக்கையிற் கட்டி விநாயகக் கடவுளை அன்புடன் வழிபட்டமையால் அவள் தன் மிடிமை முதலியன நீங்கப்பெற்றுப் பாக்கியவதியாகி விக்கிரமாதித்தனாற் சன்மானிக்கப்பெற்றாள்.

இலக்கணசுந்தரி விரதம் விடுத்த அன்றிரவு, உக்கிரமான உடைமணிகட்டித் தண்டையுஞ் சிலம்பும் தாளினின்றொலிப்பக் கொண்டல் போல்வருங் குஞ்சரமுகத்தோன் மனமிகக் கலங்கும் மன்னவனிடத்திற் கனவினிற்றோன்றி "அரசனே இலக்கணசுந்தரி இம்மனையிருப்பிற் கலக்கம் வந்திடும், அவளைப் புறத்தே கழித்தி" எனலும் மன்னனுந் துண்ணென வெழுந்து தான்கண்ட கனவை இலக்கணசுந்தரிக்குச் சொல்லுகையில், தன் யானை குதிரை முதலாம் நால்வகைப் படைகளும் பட்டு நகரமுங் கெட்டொழிதலை யுணர்ந்து, 'இமைப்பொழுதும் இவள் இங்கிருக்கலாகா'தென அயற்புறத்து அவளை அகற்றிவிட்டனன்.

இலக்கணசுந்தரி ஆருமற்றவளாய் ஒரு வணிகன் வீட்டையண்டியிருப்ப, அவ்வணிகனிடத்துள்ள நவமணிகளெல்லாம் விலையற்ற பருக்கைக் கற்களாக மாறக்கண்டு வணிகன் அவளைத்தன் வீட்டினின்றும் துரத்தினன். இலக்கணசுந்தரி ஒரு வேளாளன் வீட்டிற்புகுந்தாள். அங்கு இவள் புகுந்தபின் அவ்வேளாளனுடைய பயிரனைத்தும் பழுதுபடுதலும் அவனும் அவளை அகற்றிவிட அவள் ஒரு குயவன் மனையிற் போயிருந்தாள். அவள் போன நாட்டொடக்கம் குலாலன் வனையும் பாண்டங்களனைத்தும் உடைந்து போகக் கண்டு அவனும் அவளைத் தன் வீட்டைவிட்டோட்டினன். பின்னர் இலக்கணசுந்தரி ஒரு வண்ணான் வீட்டில் நண்ணுதலும் அவ்வீட்டு வண்ணான் துணிகளெல்லாம் காரணமின்றிக் கிழிந்துபோதலைக் கண்டு அவளை அவ்விடத்தினின்றும் நீக்கினன். அவள் பின்பு ஒரு மாலைக்காரன் வீட்டிற் பிரவேசித்தலும் மாலைக்காரன் கொடுக்கும் மாலைகளெல்லாம் பாம்பாய் மாற அவன் நடுநடுங்கி "அடி பொல்லாத நீலி நீ நில்லாதே யிங்கு" என்று சொல்லித் துரத்திவிட்டான். இலக்கண சுந்தரி ஈற்றில் ஔவையார் வைகும் மனைதனை யடைந்தனள். ஔவையார் அவளைத் தம்மனை யிருத்தி வெளியே சென்றபோது ஔவையாரைக் கண்டோரெல்லாம் அவரை வைதனர்; கல்லா லெறிந்தனர்; பிடித்துத் தள்ளினர்; பரிகாசஞ் செய்து சிரித்தனர். ஔவையார் ஆச்சரியமும் அடங்காத் துன்பமுமுற்றுத் தம்மனை மீண்டு இலக்கணசுந்தரியை நோக்கிச் "சீர்கெட்டவளே, நீ யார் சொல்லு" என வினவ அவள் தன் வரலாறனைத்தும் எடுத்துச் சொன்னாள். ஔவையார் அவள்மீது பரிவுகொண்டு "அம்மா, நீ வருந்தாதே, நிலம் மெழுகல்வேண்டும், சாணியுந் தண்ணீரும் எடுத்து வருதி" யென்று சொல்லுதலும் இலக்கணசுந்தரி சாணமெடுக்கச் சென்றபோது சாணம் புழுத்திருக்கவும், தண்ணீர் வற்றி யிருக்கவுங் கண்டு மனம் மிகவருந்தி யழுதுகொண்டு நின்றாள். மூதாட்டி அவளது நிலைகண்டு பெரிதும் பரிதாபமுற்றுத் தானேசென்று சாணியெடுத்துத் தண்ணீர் கொணர்ந்து தரை மெழுக்கிட்டுத் தீபமேற்றியபின், பூசை செய்யும்படி புத்தகமெடுத்து வருவதற்குச் சுந்தரியைப் பணிக்க அவள் சென்றவிடத்தில் புத்தகம் பாம்பாய்ப் பொருந்தி நின்றாட அன்னாள் மெத்தவும் பயந்து மண்மிசை வீழ்ந்தாள். மூதாட்டி தானே சென்று புத்தகமெடுத்து நூலிட்டுப் பொருந்தப் பார்த்து இது விநாய காபராதத்தால் வந்ததென வுணர்ந்து இலக்கணசுந்தரியை, விநாயகர் நோன்பை விதிமுறை யநுஷ்டிக்கும்படி ஆஞ்ஞாபிக்க அவள் அங்ஙன மநுஷ்டித்தாள். விரத காலத்தில்

இலக்கணசுந்தரி சிரவணஞ் செய்யும்படி விநாயகர் கதையை ஔவை யார் படித்தனர். அவளும் தன் பழியனைத்தும் நீங்கப்பெற்று பழைமை போல் இளமையும் அழகுஞ் செல்வமும் பெற்று ஔவையார் மனை யிற்றானே வசிக்குங்காலத்தில் விக்கிரமாதித்தன் வேட்டை முடித்து மிக்க தாகமுங் களைப்புமுடையனாய் ஔவையார் மனையையடைந்து "அம்மே, பெரிதும் தாகமுற்றேன், தண்ணீர் தருதி" யென்றான். மூதாட்டி அப்பமும் நீரும் அரசனுக்களிக்கும்படி இலக்கண சுந்தரி யைப் பணிக்க, அவள் கொடுபோய்க் கொடுத்தலும், அரசன் ஆர்வத் துடன் அவற்றை வாங்கி யருந்திப் பசிதாகந் தீர்ந்தபின், இலக்கணசுந் தரியை இன்னாளென்று அறியாதவனாய் அவள் பேரழகைக்கண்டு காதல்கொண்டு "மாதரார் திலதமே, நீ யார்" என்றான். இலக்கண சுந்தரி மௌனமாய் நின்றாள். ஔவையார் 'அரசனே' இவள் உன்தேவியாம் இலக்கணசுந்தரி என்று நிகழ்ந்த வரலாறனைத்தையும் எடுத்துச் சொல்லுதலும் அரசன் அற்புதமும் ஆநந்தமுமுடையவனாய் ஆனைமாமுகப் பெருமானைப் பன்முறை சிந்தித்து ஔவையை வணங்கி அநுமதிபெற்றுப் புதையல் கண்டெடுத்த ஏழைபோல மகிழ்ச்சியுடன் இலக்கணசுந்தரியையும், அழைத்துக்கொண்டுதன்மாளிகைக்குச்சென்று அவளுடன் இனிது வாழ்ந்தான். இலக்கணசுந்தரியும் விநாயக சஷ்டி விரதத்தை விதிப்படி யநுஷ்டித்து இகபர போகங்களைப் பெற்றனள்.

சைவசமயிகளனைவரும் இவ்விநாயக விரதத்தை விதிப்படி யநுஷ் டித்து இட்டசித்திகளைப்பெற்று வாழ்வாராக. (இந்துசாதனம்.)

---

## மாயாவாத மத நிரசனம்.

மாயாவாதிகள் தம்மை வேதாந்திகள் என்றும், அத்வைதிகளென் றும் பெருமையாகச் சொல்லிக்கொள்வர். வேதாந்தமாவது உபநிடதம். அவ்வுபநிடதங்கள் சிவமும் ஆன்மாவும் மலமுமான பொருள்களைப் பதி பசு பாசமென வைத்து அவற்றின் இயல்பு கூறி, பாச நீங்கி ஆன்மா சிவத்தை யடைதற்கு ஏற்ற உபாயங்களை விதிப்பன. மாயா வாதிகள் அவற்றை ஏற்றுக்கொள்ளாது ஈசனும் பொய் சீவனும் பொய் மாயையும் பொய் என்றும், ஈசுர உபாசனை வேண்டப்படுவதில்லை யென் றும் உரைப்பவர். ஆதலால், மாயாவாதிகளுக்கும் வேதாந்தத்துக்கும் வெகு தூரமாம். இன்னும், பிரமம் ஏகமாம். இரண்டாவது பொருள் இல்லை யென்பவர். அதனால் இரண்டன்மையை உணர்த்தும் அத்து வித நிலைக்கும் மாயாவாதிகட்கும் யாதொரு சம்பந்தமுமில்லையாம்.

அவர் ஏகமான ஆன்மாவே பிரமம் என வாதிப்பதால் ஏகான்ம வாதிகளெனவும், அவ்வேகான்ம வாத வகையுள் ஒன்றாகிய மாயா வாதத்தைப் பற்றியதால் மாயாவாதிகளெனவும் பெயர் பெறுவர். "மாயா" என்பதற்கு இல்லையென்று பொருள் கூறி, ஏகமான ஆன்மாவைத் தவிர வேறொன்றும் இல்லை இல்லை இல்லை இல்லை என்று எல்லாவற்றையும் இல்லாததாகவே வாதிப்பதால், இல்லை யென்பதற்கு ஆதாரமான மாயா பதத்தோடு கூட்டி மயாவாதிகளெனப்பட்டனர், அவர் மாயாவாதிகளெனப்படுதற்கு இதுவே காரணமாம்.

அம்மாயாவாதிகள் ஆன்மாவாகிய பிரமமேயன்றி மற்றொன்றும் இல்லை இல்லை இல்லையென்று தலையிலடித்துக் கொள்ளினும், அநாதி தொட்டு நிதரிசனமாய்க் காணப்படும் பிரபஞ்சக் காட்சிக்கு ஒரு வழி விடவேண்டியவராகிறார். அதனால் மேற்கோளைச் சாதிக்கமாட்டாது தோல்வித்தானமெய்தி, மூலப்பிரகிருதியென ஒன்றுண்டு, அது பிரமத்தின் சத்தியாம். அது பிரமத்தோடு அபின்னமா யிருக்குமென்பர். அந்தச் சத்தியாகிய பிரகிருதியில் பிரமம் மோகிதனாகுமென்றுங் கூறுவர். அப்பொழுது அந்தப் பிரமத்தின் சேர்க்கையால், சத்துவம் ரஜசு தமசு என மூன்று குணங்கள் பிரகிருதியிலுண்டாக, சத்துவ குணம் மாயை எனப் பெயர் பெற்று நிற்கும்; அந்த மாயையில் பிரமம் சேர்ந்து பிரதிபிம்பித்து ஈசுரன் உண்டானா னென்பர். சத்துவ குணத்திலும் சத்துவ ரஜோ தமோ மயமான மூன்று குணங்கள் பிரிய ஈசுவரன் சத்துவகுணத்திற் பிரதிபிம்பித்துப் பிரமனாயும், ரஜோ குணத்திற் பிரதிபிம்பித்து விஷ்ணுவாயும், தமோகுணத்திற் பிரதிபிம்பித்து உருத்திரனாயும் தோன்றினனென்பர்.

மூலப்பிரகிருதியின் ரஜோகுணத்தில் அநேகம் அவித்தைகள் தோன்ற, அந்தப்பிரமம் அவற்றிற் பிரதிபிம்பித்து அவித்தியா வசனாகி, அநேக சீவர்களாயிற்று என்றும் பகர்வர்.

மற்றைத் தாமதகுணத்தில் ஆவரணசத்தி தோன்ற, அதனால் சீவர்களெல்லாம் மறைப்புண்டு பந்தமுடையராவர்; அக்குணத்தில் விக்ஷேபசத்தி தோன்றி அதில் தத்துவங்கள் தோன்ற, அந்தக்கரணம், இந்திரியம், வாயுக்கள் கூடிய சூக்குமசரீரத்தைப்படைத்து ஈசுவரன் அந்தச் சீவர்களுக்குக் கொடுத்தாரென்றும் பின்பு தூல சரீரமுண்டாக அவற்றையடைந்து சீவர்கள் பிறந்திறந் துழல்வரென்றுங் கூறுநிற்பர்.

பின்பு, இந்தச் சீவர்கள் குருவின் உபதேசத்தினாலே தத்துவங்களை உணர்ந்து அவற்றின் வேறாகத் தன்னை யுணர்ந்து தானே பிரமமென்றிருத்தல் சீவன்முத்தி நிலையென்றும், உணர்ந்தவாறே பிரமத்தில்

லயித்து ஏகமாதல் முத்தியென்றும் உரையாநிற்பர். இம் மாயாவாதிகள் கூறும் இக்கொள்கைகள் சிறிதும் பொருந்தாவென்பதனை நியாய முகத்தால் நிறுத்திக் காட்டுவாம்.

பிரமம் நிர்க்குணமா மென்னும் மாயாவாதிகள் பின்பு பிரமம் பிரகிருதியைக் குணமாகவுடையது என உரைத்தல் மாறுபாடாம். பிரமம் பிரகிருதியாகிய குணத்தையுடையதாயின், அதனை நிர்க்குணப் பொருளென்று சொல்லமுடியாது. அன்றியும், பிரமம் சித்துப் பொருள். பிரகிருதி சடம். சடமாகிய குணம் சித்தாகிய பொருளில் இருக்கக்கூடாது. மாயாவாதிகள் பிரமத்தை நிர்க்குணமென்று சொல்லிவிட்டுச் சடகுணத்தை அந்தப் பிரமத்தின் தலையிலே கொண்டு வந்து சுமத்துவது பெரியதோர் அநியாயமாம். சித்தும் சடமும் ஒளியும் இருளும்போல இகலி நிற்பன. ஒளியுடைப் பொருளாகிய சூரியன் இருளைத் தனக்குக் குணமாகவுடையது என்றால், அவ்வுரையை ஒத்துக்கொள்ள முடியுமா? அதுபோலப் பிரமத்திலே பிரகிருதி குணமாயிருக்கு மென்றல் ஒவ்வாத காரியமாம்.

இனிப் பிரமம் மெய்ப்பொருள்; அதிற்றோன்றும் பிரகிருதித் தோற்றம் பொய்யாயது. பிரமம் இப்பிபோலவும், பிரகிருதி இப்பியிற் றோன்றும் வெள்ளித் தோற்றம்போலவு மிருக்கும். இப்பியில் வெள்ளித் தோற்றம் பொய்யாதல்போலப், பிரமத்திற் பிரகிருதி பொய்யாய்த் தோன்றுமெனின், அறியாது கூறினை; பிரமம் மெய்த்தோற்றத்தை விளைவிக்குமே யன்றிப் பொய்த் தோற்றத்தை விளைவிக்கமாட்டாது. சூரியன் எப்பொழுதும் ஒளியைத் தருமேயன்றி இருளைத்தரமாட்டாது. அதனிடத்துப் பொய்யாயாவது இருட்டன்மை தோன்றமாட்டாது. மாயாவாதிகள் இதனை யுணராமற் பிரமம் பொய்த் தோற்றத்துக்கு ஏதுவாமென்பது மிக்க அறியாமையாம்.

அன்றியும், இப்பியிற்றோன்றுந் தோற்றம் இப்பித் தோற்றமேயாம். அது வெள்ளித் தோற்றமன்று. வெள்ளியில் வெள்ளித் தோற்றமும், இப்பியில் இப்பித் தோற்றமும் இருக்கும். அன்றி, இப்பித் தோற்றத்தை வெள்ளித்தோற்ற மென்னின் இப்பித்தோற்றம் வேறென்னமென வினவுண்டாம். அல்லது இப்பிக்கு ஒரு தோற்றமும் இன்றாமெனவும் ஆகும். ஆதலால், இப்பியில் இப்பித் தோற்றமும், வெள்ளியில் வெள்ளித் தோற்றமும் இருக்குமென்றலே சால்பாம்.

அதுபோலப், பிரமத்திற்றோன்றுந் தோற்றம் பிரமத் தோற்றமாகவே யிருக்கும். அங்ஙனமின்றி, அப்பிரம வியல்புக்கு மாறான சடத்தன்மையுள்ள பிரகிருதியாகிய தோற்றம் பிரமத்திற் றோன்றுதற்கு

ஒரு நியாயமுமில்லையாம். இதை மறுத்து அப்பிரமம் பிரகிருதி குணத்தையே யுடையதென்பாராயின், பிரகிருதியைப்போல இவர் கூறும் பிரமமும் சடமாக வேண்டும். பிரமம் சச்சிதானந்தமயம் என்று இவரும் ஒப்புக்கொள்வதால், அவ்வியல்புக்கு மாறுக அப்பிரமம் பிரகிருதியை யுடையதென்பது வெற்றுரையாயே முடியும்.

இன்னும், பிரகிருதி அநிர்தசட துக்கமயம். பிரமம் சச்சிதானந்தமயம். இரண்டும் எதிர்மறையான இயல்பு. அதனுல் ஒன்றுக்கொன்று மாறுன இரண்டு தன்மை அந்தப் பிரமப்பொருளில் இருக்குமென்றல் அசம்பாவிதமாம். அநிர்தசட துக்கமான பிரகிருதியியல்பு இருக்குமெனில், இவரது பிரமம் சச்சிதானந்தமயமான பிரமமன்று; வேறென்றுமென்று சொல்ல நேரும்.

இன்னும், இப்பி ஒன்று, வெள்ளியொன்று. இப்பியில் ஓரோர் சமயத்து வெள்ளித் தோற்றம் நிகழவுங்கூடும். யாருக்கு? பிராந்தனுக்கு. வெள்ளியில் வேட்கையுடைய பிராந்தனொருவன், மெய்யுணர்வின்றி, இப்பியைக் கண்டவுடனே, தன்னிடத்து இயல்பாயிருக்கும் பிராந்தியால், நிருவிகற்பமாகக் கண்ட அப்பொருளை வெள்ளியென மாறுபடக் கொள்வன். இக்காட்சியில் வெள்ளியொன்று. அதில் வேட்கை வைத்தோனொருவன். இப்பி ஒன்று. அதனை அவன் கண்டான். அக்கண்காட்சி நிருவிகற்பம். அக்காட்சிக்குப் பின் அவன் மனத்திருந்த வெள்ளி வேட்கையால் வெண்மை நிறமுள்ள அவ்விப்பியையும் வெள்ளியென்று கருதி மாறுபடக்கொண்டு பிராந்தனயினன். வெள்ளியை முன் கண்டிருந்த காட்சியே அவனை அவ்வாறு கொள்ளும்படி செய்தது. இந்த உவமைப்படி இப்பித்தானத்தில் பிரமத்தை வைக்க வேண்டும். இப்பியை வெள்ளியாகப் பார்த்த பிராந்தன் போலப் பிராந்தனை எவரை வைக்கலாம். வைப்பதற்குப் பிரமத்தைத் தவிர வேறு பொருளில்லையே. பிராந்தன் முன் கண்டிருந்த வெள்ளித்தானத்தில் எதை வைக்கலாம். அதற்கும் ஒன்றுமில்லையே. ஆதலால் பிரமத்தில் பிரகிருதித் தோற்றம் பொய்யாகத் தோன்றியிருக்கலாமென ஏற்றுக்கொள்வதற்கும் இடத்தைக் காணவில்லை. இவ்விஷயத்தில் இவ்வளவு சங்கடமிருக்க, மாயாவாதிகள் பிரமத்தில் பிரகிருதி தோன்றிற்று என்று ஊளையிடுகின்றனர். அறிவில்லாமற் கூறும் அவரது வெற்றுரையை அறிவுடையோர் எப்படி ஏற்றுக்கொள்வர்.

இனி, அந்தப்பிரமம் தன் குணமாகிய பிரகிருதியைக் கண்டு தானே மயங்கிற்று எனல், இப்பியின் வெளித்தோற்றத்தைக்கண்டு இப்பியே மயங்கிற்று என்றற்போலிருக்கிறது. காட்சிப் பொருளும் காண்

பவனும் வேறு வேறு இருந்தாலன்றிக் காட்சி நிகழமாட்டாது. ஆதலால், இக்கூற்றும் அசம்பாவிதமாம்.

பிரகிருதியாகிய குணத்தில் சாத்துவிகம் இராசதம் தாமதம் என்னும் மூன்று குணங்கள் தோன்றின என்பதும் வழுவாம். என்னை? பொருளிற் குணந் தோன்றுமேயன்றிக் குணத்திற் குணந்தோன்றமாட்டாது. பிரகிருதி பொருளாயின் அதனிடத்து முக்குணந் தோன்றலாம். இவர் பிரகிருதி ஒரு சக்தியென்று சொல்வதால் சக்தியாகிய குணத்தில் முக்குணந் தோன்றின வென்றல் பொருந்தாமையினென்க.

முக்குணத்துள் ஒன்றாகிய சத்துவகுணத்தில் பிரமம் பிரதிபிம்பிக்க ஈசுரன் தோன்றினனென்பதும் பிழையாம். பொருளிற் பொருள் பிரதிபிம்பிக்குமேயன்றிக் குணத்திற் பொருள் பிரதிபிம்பிக்கமாட்டாது. முகமும் பொருள். கண்ணாடியும் பொருள். கண்ணாடியில் முகம் பிரதிபிம்பிக்கின்றது. இவ்வாறன்றி ஒரு குணத்திலே ஒரு பொருள் பிரதிபிம்பித்ததாக நாம் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. அன்றியும், பிரதிபிம்பம் தோற்றமாத்திரமே யன்றிப், பொருளாகமாட்டாது. ஈசுரன் வடிவுடைப்பொருள்; முத்தொழில் செய்யுங் கர்த்தா. அவரைப் பிரதிபிம்ப மாத்திரமென்று சொல்லக்கூடாது. நமது வடிவம் கண்ணாடியிற் றோன்றியவிடத்து நமது பிரதிபிம்பம் வடிவாயெழுவதுமில்லை. ஒரு தொழில் செய்வதுமில்லை. அதுபோலவே ஈசுரன் பிரதிபிம்பமானால் உருக்கொண்டு வருவதுமில்லை. முத்தொழில் செய்வதுமில்லை. ஆதலால் இக்கதையும் பொருத்தமற்றதேயாம்.

(இந்துசாதனம்)

---

## சுந்தரவல்லியின் நற்போதனை.

(தொடர்ச்சி)

சுந்தர - தோழி! வீட்டையும் வீட்டின் புறத்தையுஞ் சுத்தஞ் செய்தபின்பு, வீட்டுப் பாத்திரங்களைத் துலக்கிக் கழுவிக் கவிழ்த்து வைத்துவிட்டு, ஸ்நானஞ் செய்தல் வேண்டும். ஸ்நான சமயத்திலே, உடம்பில் அழுக்கு நீங்கவும் வாசனையேறவும் சவர்க்காரம் (சோப்பு) பூசுதல் புத்தியல்ல. சவர்க்காரம் மிகச் சூடுள்ளது. கொழுப்பு முதலிய அசுத்தப் பொருள்களையும் பொலிவுக்காகச் சேர்த்துச் செய்கிறார்கள். மாடு தின்னும் சாதியாராகிய ஐரோப்பியர் முதலானவர்களுக்கு அது அடுக்குமேயன்றிச் சைவர்களாகிய நமக்கு அது உரியதன்று. சவர்க்காரத்திலே கலக்கப்பட்டிருக்கும் பொருள்களை உற்று நோக்கினால்

அதைக் கையினுல் தொடவும் மனம் வரமாட்டாது. அன்றியும் அதற்காகக் கட்டி ஒன்றுக்குக் கால் ரூபா அரை ரூபா வீதம் விலை கொடுத்து வாங்கி அந்நியதேசத்துக்கு நாம் பிழைப்புண்டாக்குவதும் நம் பொருளை வீண் செலவு செய்வதும் புத்தியன்று. உடம்புக்கு நட்டம், ஆசாரநட்டம், பொருள் நட்டம் என்னும் பல நட்டங்கள் அதனுல் உண்டாகின்றன.

கமல - அப்படியானுல் வேறு என்ன தேய்த்து ஸ்நானஞ் செய்யலாம்?

சுந்த - நம்முன்னேர் நமக்கென்று தெரிந்து எடுத்துக்கொண்ட வாசனைப்பொடியை முன்னேர் போல நாமுந் தேய்த்து வருதல் புத்தியாகும்.

கமல - வாசனைப்பொடி தேய்த்தல் உடம்புக்கு நல்லதோ?

சுந்த - மிகவும் நல்லது. அதில் பயற்றம்மா, கஸ்தூரி மஞ்சள், கோரைக்கிழங்கு, கார்கோலரிசி, விலாமிச்சவேர், ஆவாரையிலை முதலாய் இன்னுஞ் சில குளிர்ச்சியும் வாசனையும் அழுக்கெடுக்குந் தன்மையும் உள்ள சாமான்கள் சேர்த்து அந்த வாசனைப்பொடி செய்து வைத்துக் கொள்வார்கள். அது இந்தச் சவர்க்காரத்தைப்போல் கெடுதலும் அசுத்தமும் உள்ளதல்ல. சுருக்கமான செலவிலும் முடிந்துவிடும். நல்ல குளிர்ச்சியாயும் வாசனையாயு மிருக்கும். அழுக்கை நன்றுக நீக்கும். ஸ்நானஞ் செய்தவுடன் மிக ஆரோக்கியமாயிருக்கும். இந்தியாவிலுள்ள பெண்கள் பலரும் இன்றும் இதனையே தேய்த்து ஸ்நானஞ் செய்கின்றுர்கள். நானும் அப்படியே செய்து வருகின்றேன். இன்றும் அந்த வாசனைப் பொடியெ தேய்த்தேன். என்மேற் கமழும் வாசனையைப் பார்த்தாயா? இது அந்தப் பொடியின் வாசனையேயாம். நீயும் சவர்க்காரத்தைவிட்டு இதையே உபயோகப் படுத்துவாயாகில் அதனுல் நன்மையுண்டாகும்.

கமல - நல்லது இதைப்பற்றி முன் எனக்குத் தெரியமாட்டாது. இனி அப்படியே செய்கிறேன்.

சுந்த - இக்காலத்து அநேக மங்கையர் மஞ்சள் அணிதலை விட்டுவிட்டார்கள். அது மடைத்தனம். மஞ்சள் அணிதல் அவசியமான காரியம்.

கமல - நானும் மஞ்சள் அணிவதில்லை. சவர்க்காரந் தேய்த்த முகத்தில் மஞ்சள் பூசுவது கெடுதலென்று விட்டுவிட்டேன். சவர்க்காரத்திலே சுண்ணும்புச் சத்துச் சேர்வதால், மஞ்சள் பூசுவது அதற்கு விரோதமென்று சொன்னுர்கள். அதனுல் நான் பூசுகிறதில்லை.

சுந்த - சவர்க்காரம் கெடுதலான பொருளென்று முன்னமே சொல்லிவிட்டேன். மஞ்சள் அணியாதிருப்பது மிகவுங் கெடுதல்.

கமல - மஞ்சள் அணிவதில் உள்ள நயமென்ன? அணியாவிட்டால் வருங் கெடுதல் என்ன?

சுந்த - சுமங்கிலிகள் மஞ்சள் அணியவேண்டுவது ஆவசியகம். அதனால் நாயகனுடைய ஆயுள் பெருகும். இல்லாதொழியில் நாயகனுக்கு ஆயுள் குறையும்.

கமல - நன்றாயிருக்கிறது! நாயகனுக்கு ஆயுள் கூடுவதும குறைவதும் மஞ்சளிலா இருக்கிறது!! இது ஒரு குருட்டு நம்பிக்கை யென்று நினைக்கிறேன்.

சுந்த - அப்படியல்ல. நம்முடைய தேகமும் ஆண் பிள்ளைகளுடைய தேகமும் மிக வித்தியாசமுள்ளது. நம்முடைய தேகம் எப்பொழுதும் சூடுள்ளதாயிருக்கும். எங்களுடைய சுவாசத்தில் ஒருவகையான அசுத்தமும் நச்சுத்தன்மையும் இருக்கிறது. ஆதலால் பெண்களுடைய சுவாசம் நாயகன்மேற் பட்டால், அதினும் சயனித்திருக்குங் காலத்து முகத்திற்பட்டால், அந்த நச்சுத்தன்மையுள்ள சுவாசம் நாசி வழியாக உட்சென்று நோய்க்கிடமாகி அதுவும் சுவாசப் பையில் தங்கிக் கேடு செய்யும். சுவாசத்தில் கேடுண்டாகவே அதனால் ஆயுள் குறையும். இப்படிப் பலநாள் நடந்தால் விரைவில் மரணத்தை உண்டாக்கிவிடும். அது பற்றியே ஆயுள் குறையும் என்று எங்கள் சாத்திரங்கள் சொல்கின்றன. மஞ்சள் முகத்தில் அணியப்படுவது எதற்காகவெனில், பெண்களுடைய நாசி வழியாக வரும் சுவாசத்தின் நச்சுத்தன்மையை எடுப்பதற்கு மஞ்சள் நல்ல மருந்தாகும். மஞ்சளில் அந்த நச்சுத்தன்மையை நீக்கும் குணமிருக்கிறது. அதையறிந்தே நச்சுத்தன்மையை நீக்கும் மருந்துப் பொருளாக மஞ்சளை உபயோகப்படுத்தி வரும் வழக்கத்தை ஆன்றோர் கைக்கொண்டார்கள். மஞ்சளால் அந்த நச்சுத் தன்மை நீங்கவே, சுவாசமும் சுவாசம் படியும் பெண்களுடைய முகமும் சுத்தமாயிருக்கும். அப்பொழுது நாயகனுக்கு அச்சுவாசத்தால் வருங் கெடுதல் உண்டாகமாட்டாது. ஆயுள் குன்றவுமாட்டாது. அது பற்றியே மஞ்சள் பூசுவதால் நாயகனுக்கு ஆயுள் பெருகுமென்று பெரியோர் சொல்லுவார்கள். சுமங்கிலிகளான பெண்கள் நாயகனுக்கு ஆயுள் பெருக்கும் பொருளென்று மஞ்சளை விசுவாசமாக அணிவார்கள். ஒரு நாளாவது மறந்தேனும் பூசாமல் விடமாட்டார்கள். இன்னும் மஞ்சளிலே பல நற்குணங்களிருக்கின்றன. எந்தக் காரியத்துக்கும் மஞ்சளை ஒரு மங்கலப் பொருளாகக் கொள்வதை நீ கண்டதில்

லேயா? மஞ்சளின் சிறந்த குணத்தைக் கண்டுதான் அதை அப்படி எடுத்துக்கொண்டார்கள்.

கமல - அப்படியா! மஞ்சளில் இவ்வளவு நல்ல குணமும் நாயகனுடைய ஆயுள்விர்த்திக்கு ஏதுவான தன்மையும் இருக்கிறதா! முன்னோரிடத்தில் இந்த அறிவு இருந்தது உண்மையானபடியால் அதைச் சிரத்தையாக எடுத்துக்கொண்டார்கள். இக்காலத்தில் என்போன்ற சிறுமிகளுக்கு ஒன்றுந் தெரியாமையால் விசுவாசங்குறைந்து மூடத்தனமாய் அவசியமான இந்த மஞ்சட்பூச்சை விட்டுவிட நேர்ந்தது. இப்பொழுது நீ சொன்னபின் அதன் அருமை வெளிப்பட்டு நான் செய்து வந்தது பெரும் பிசகென்று மனவருத்தமா யிருக்கிறது.

சுந்த - இனியாவது சிரத்தையோடு பூசிவா.

கமல - ஆனல், இன்னுமொன்றிருக்கிறது. மஞ்சட்பூச்சினுல் முகத்தின் தோல் சுருங்கிவிடுமென்று சொல்லுகிறுர்களே. அதற்காகச் சில இளம்பெண்கள் முகத்தின் அழகு குறைந்துவிடுமென்று பூசப் பின்வாங்குகிறுர்கள். அதன் உண்மையும் விளக்கவேண்டும்.

சுந்த - அது தவறுன எண்ணம். மஞ்சளில் அந்தக்குணமில்லை, அன்றியும் முகத்தின் அழகு யார்பொருட்டு? நாயகன் கண்டு மகிழும் பொருட்டன்றே? நம்மால் நாயகனுடைய ஆயுள் குறையநேரிடுமானல், நாம் பின்பு இந்த அழகைப் பத்திரப்படுத்தி வைத்திருப்பது யார் பொருட்டு? இது மிகவும் அறியாமையான செயல். உள்ளவாறு மஞ்சளில் அந்தத் தூர்க்குணம் இருக்கவுமில்லை. மஞ்சள் பூசுவதால் முகத்தில் அழகுண்டாகுமென்பதே உண்மை. (ஞானசித்தி)

---

## சமரசஞான தீபம்

(7-வது மலர் 207-ம் பக்கத்தொடர்ச்சி.)

பதிபசுபாசங்கள் மூன்றுக்குமாத்திகங்கூறும் வைதிக சைவத்தின் முன்னர்ப் பாசபசுக்களுக்கு நாத்திகங்கூறிப் பதிக்கு மாத்திரம் ஆத்திகமங்கீகரித்து அப்பதியைக்காட்டிலும் பசுபாசங்கள் வேறில்லையெனப் பதிநித்தைகூறு நிற்கு மம்மாயாவாதம் ஸாம்யம் பெறுவதெங்ஙனம்? கதிரொளியும், கண்ணொளியும் இருளுமாகிய மூன்றுங்கதிரொளியே யென்னப் பொருந்துமா? தனித்தனி யொவ்வொன்றும் வேறுவேறு லட்சணங்களைக் கொண்டு விளங்கலால். கதிரொளிசிவமும், கண்ணொளி யுயிரும், இருள் மலமுமானபோது இம்மூன்றையுங் கதிரொளியேயென்று சொல்லுவதெங்ஙனம்? மூன்றும் வேறு வேறுகி

வியாபக, வியாப்தி, வியாப்பியங்களாக விரவிநிற்குமென்னுஞ் சைவ சித்தாந்தமும், இவை மூன்றல்ல, வொரே பொருளென்னும் மாயா வாதமு மெப்படியோ சமரசமாதும்? பசுபாசங்களை யில்பொருள்களாக மதித்துப் பதியொன்றுளதெனக் கொண்டதேயன்றி அப்பதிதருமங் குலைய வதுவே பசுபாசங்களாய்த் திரிந்ததென்னு மாபாசத்தாலப்பதிக்கு நாத்திகத்வமே ஸித்திக்கச் செய்தவராயினர். அப்படிப் பரிணமத்தைப் பெறுவது பதியாகக் கூடாமையால். அல்லது பசுவே பதியாயின தென்றாலும், பாசமே பதியாயினதென்றாலுஞ் சர்வாஸங்கதமெனத் தள்ளுண்டு போமெனவறிக. வேதாந்தத்தின் பொருளாயுள்ளது ஆக மாந்தமாகையா லவ்வாகமாந்தமே ஸித்தாந்தமென லமையும். இவ் விரண்டுமே ஸமரசமாகுமன்றி யேனைய நூன் முடிவுகளைச் சமரச மெனல் பொருந்தாது! பொருந்தாது!! "ஒரும் வேதாந்தமென்றுச்சி யிற்பழுத்த, வாராவின்ப வருங்கனி பிழிந்து, சாரங்கொண்ட சைவசித் தாந்தத், தேனமுதருந்தினர் சிலரே" எனப்போதரும் பிரமாணத்தானு மதுநிலையுதல்பெறும் வேதாந்த முடம்பும், சித்தாந்தமுயிருமென விளங்கலா லவை யத்துவிதப்பட்டு நிற்கு முறைமை நோக்கி அதுவே யிதுவெனவும், இதுவேயதுவெனவுங் கூறுதல் பொருந்தும். இன்னும், "வேதாந்தத் தெளிவாஞ்சைவ சித்தாந்தத் திறனிங்குத் தெரிக்கலுற் றாம்" எனவும், "வேதாந்த சித்தாந்தமே பிறவாவீடென்றான், ஓதாமல் வேதமுணர்ந்தோன்" எனவும் போந்தவருள் வாக்கியங்களு மவ்வுண் மையைக்காட்டும். இவ்வுண்மையை விளக்கவேயன்றோ "வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர்கணமே" என நந் தாயுமானாருங் கூறினர்? இங்ஙனந்தோராது மாயாவாதத்தையே அவர் வேதாந்தமெனக் கொண்டாரெனவும், அதையே சித்தாந்தமாகியசைவத் தோடு சமரசங் கூறினரெனவும் வீணசை கொண்டு உரிமை பாராட்ட வருமவர் வாய்மைப்பாடு வளம் பெறுதென்க.

அவர் கோளை மாயாவாதம், போலி வேதாந்தம், போலியத்துவிதம், அகம்பிரமவாதம், ஏகான்மவாதம், பிரச்சின்ன பௌத்தவாதம், சூனிய வாதம், நாத்திகவாதம் என்றற்றொடக்கத்துப் பல பெயர்களால் வழங்கு வதே யுரிமையென்க. என்னே, அகம்பிரமவாதம் என்பது எமக்கு மொப்பேனும் அத்துடன் பிரமவாதமென்று மதைவழங்குவே மெனின், அது கூடாது, பிரமவிலக்கணஞ் சிதைந்து போக விவகரிக்கும் அவலத் தைப் பெற்று விளங்குகையால். உலகாயதனுக்கு அவன் கூறும் பூத சமட்டியே ஜகத்காரணமாகின்றமையா லவனுமன்றோ பிரமவாதியென வெளிவரக்கூடும்? அவன் பூதத்தையே பொருளெனக் கொண்டபடி,

இவன் பசுவையே பொருளெனக் கொண்டமையா லிருவரும் போலிப்
பிரம வாதிகளேயாயினர். இரண்டுக்கும் வேருகப் பிரமமொன்று
விலட்சணமாக வுண்டாகையால், அந்தப் பிரமம் சிவவாசகத்தால்
சைவசித்தாந்த மொன்ருனே பெறப்படுகையால் அதற்கே பிரம்ஹ
வாதம் என்னும் பெயர் சிறக்குமென்க.

இப்படிப்பட்ட வுண்மைகளை யறியாது தம்ம விபரீதப்படியே
தாயுமானுரையுங் கொண்டு அவர் சுத்தவேதாந்தியென்பவரும்,வேதாந்த
சித்தாந்த சமரசி யென்பவருமாகப் பொங்கி வழியும் பூரியருள்ளம்வெள்
குற வின்னுஞ் சில வசனங்களைக் காட்டி அவர் சைவசிரோரத்னமாயுள்
ளவரென்பதை நிலைக்கப்பண்ணுவாம் "கவ்வுமலமாகின்ற நாகபாசத்
தினுற் கட்டுண்ட வுயிர்கண் மூர்ச்சை, கடிதகலவலியவரு ஞான சஞ்
சீவியே" எனவும், "காரிட்ட வாணவக் கருவறையிலறிவற்ற கண்ணி
லாக் குழவியைப்போற், கட்டுண்டிருந்த வெமை வெளியில் விட்டு"
எனவும், "கருமருவு குகையனையகாயத்தி னடுவுட் களிம்பு தோய் செம்
பனையயான், காண்டகவிருக்க நீ ஞானவனன் மூட்டியே கனிவுபெறவுள்
ளுருக்கிப், பருவமதறிந்து நின்னருளான குளிகை கொடு பரிசித்து
வேதிசெய்து, பத்து மாற்றுத் தங்கமாக்கியே பணிகொண்ட பட்சத்தை
யென் சொல்லுவேன், அருமை பெறு புகழ்பெற்ற வேதாந்த சித்தாந்த
மாதியாமந்த மீது, மத்துவித நிலையராயென்னை யாண்டுன்னடிமை யான
வர்களறிவினுடுங், திருமருவு கல்லாலடிக்கீழும் வளர்கின்ற சித்தாந்த
முத்தி முதலே, சிரகிரி விளங்கவரு தட்சிணுமூர்த்தியே சின்மயானந்த
குருவே" எனவும் போந்திடும் வாக்கியங்களைத் தரிசித்தாலன்றி
வேதாந்த சித்தாந்த சமரச வுண்மை விளங்காதென்க. இந்த வசனங்
களால் பதார்த்தத்திரய போதகமாகிய சைவரஹஸ்யமே பிரதிபாதிக்கப்
பட்டது. அன்றியும், வேதாந்த சித்தாந்தங்களை யாதியுமந்தமுமெனக்
கூறப்பட்டது. (வேதாந்த சித்தாந்தமே பிறவாவீடென்ருன்) என்னும்
வாக்கியம் கண்ணுடைய வள்ளலாரருளிச் செய்ததில் வேதத்தினுடைய
வந்தத்திலுள்ள சித்தாந்தம் என்று பெறப்பட்ட வர்த்தத்தையேயன்ருே
விந்தவசனமுங் காட்டிற்று? இன்னும், அத்துவித நிலையினராயுள்ள
பேர் சிவனுக்கடிமைகளெனவும், அவருக்குத் தாமடிமையெனவுங்
கூறினதாக வெளிப்பட்டது. இதனுல் வேதாந்தத்தைக் களவாடியது
போல் அத்துவிதந் தம்மதெனக் களவாடியதுஞ் செரிக்காமற் போயிற்
றென்க. அத்துவித மென்பதற்கு ஏகமென்று பொருள் கொண்
டழியு மன்ஞேரை யடிமை கொள்ள வேருெரு பொருள் அவருக் கன்
னியமாகத் தேடக்கிடையாமையி னவரை யவ்வத்துவிதமுந் தெருவில்

விட்டதென்க. ஆயின், "சைவமுதலாவளவில் சமயமும் வகுத்து மேற் சமயங்கடந்த மோன, சமரசம் வகுத்து" எனச் சைவாதீதமான சமரசமொன்று கூறியதென்னையெனின், இதனுண்மையைச் (சங்கற்ப நிராகரணத்தில்) சைவாதி சங்கற்பமறுப்பிற் கண்டுதெளிக. இன்னும், வேதமுடனாகம புராண இதிகாசமுதல் வேறுமுள கலைகளெல்லா, மிக்காக வத்துவித துவித மார்க்கத்தையே விரிவாயெடுத்துரைக்கு, மோதரிய துவிதமே யத்துவிதஞானத்தை யுண்டுபணு ஞானமாகு, மூகமநுபவவசன மூன்றுக்கு மொவ்வுமீ துபயவாதிகள் சம்மதம், ஆதலினெனக்கினிச் சரியையாதிகள் போதும்" என்னும் வசனத்தையுஞ் சற்றே பரியாலோசிப்பாம். இதனுள், (ஓதரிய துவிதமே யத்துவித ஞானத்தை யுண்டுபணுஞானமாகும்) என்றதை மாயாவாதமாகிய அத்துவித ஞானத்தைச் சைவமாகிய துவிதஞான முண்டுபண்ணுமென்று பொருள்கொண்டு மயங்குவர். மேல், (யூகமநுபவவசன மூன்றுக்கு மொவ்வுமீ துபயவாதிகள் சம்மதம்) என்ற விடத்தில் உபயவாதிகளென்பது துவைதியாகிய சைவனும், அத்துவைதியாகிய மாயாவாதியுமெனவன்றோ பொருள் கொள்ளவேண்டும்? அங்ஙனங் கொண்டால் பொருந்தாது மாயாவாதி தனது மார்க்கத்தை மேலாகக் கருதினவனாகையால் சைவத்தைத் தனது மதத்துக்கு ஸாதனமாகக் கொள்ளுவன். இது ஒருவாதிக்கு ஸம்மதமாயிற்று. இவன் கருத்திற்கேற்பச் சைவசித்தாந்தி தன்னைத் துவிதியாகவும், தனக்குமேலிட்டவத்து விதியாகிய மாயாவாதி யொருவனுளனெனவும், அவன் மதத்திற் கூட்டி முடிக்கும் ஸாதன மாத்திரத்தது தான் பற்றியுள்ள சைவமெனவுமொப்பி யிருந்தாலன்றோ மற்றொரு வாதிக்கும் ஸம்மதமென்பதுபோதரும்? அப்போதன்றோ உபயவாதிகள் ஸம்மதம் என்னுஞ் சொல் பிரயோசனத்தையடையும்? சைவசித்தாந்தியின் ஸந்நிதியில் மாயாவாதிக்குப் போலியத்துவிதியென்னு மிகழ்ச்சிப் பெயருண்டாகிப் புறப்புறச் சமயியா யொதுங்குந் தன்மைநேருமாயி னவன் சாய்வுகாலிந்தவிடத்திலெம்மட்டிற் பயன்படும்?

(வரும்)

## சைவக்கிரியாதிகார நிரூபணம்

(24-வது பக்கத் தொடர்ச்சி)

அவற்றுட் சில ஈண்டு வருமாறு :—

(க) நமது தேசம் கொடுங்கோன் மன்னராகிய மகமதியர் ஆளுகைக்குட்பட்ட காலத்தில் அன்னோர் பரசமயத் துவேஷம் மேற்கொண்டு நமது சாஸ்திரங்களை நெருப்பிற் கொளுத்தல், ஆலயங்களை யழித்தல், ஆசாரங்களை அனுட்டிக்கவொட்டாது தடுத்தல் முதலிய பெருந் தீங்குகள் செய்து வந்தமை.

(உ) அக்கொடுங்கோன் மன்னரொழிந்த பின்னரும் சைவசமய பரிபாலனத்துக் கென்றேற்பட்ட மடாதிபதிகள் சமயக் கல்வியைப் பரவச் செய்யாமலும், சமய சாஸ்திரங்களைப் பரவச்செய்யாமலும், சமயாசாரங்களை அனுட்டிக்கும் விதிகளைப் போதியாமலும் பராமுகஞ் செய்தமை.

(ங) சைவசமயிகளாகிய ஜமீன்தாரர்களும், சைவப்பிரபுக்களும், சைவ வித்துவான்களிற் பலரும் சமயாபி விருத்தியில் ஒரு சிறிதுந் தலையிடாது தங்கள் தங்கள் லௌகீக காரியங்களிலே மனத்தைச் செலுத்தியிருந்தமை.

(ச) ஸ்மார்த்த சமயிகள் தங்கள் சமய சாஸ்திரங்களைச் சைவ சமயிகளைப்போல் மறைத்துவைத்துக் கொள்ளாமல் அச்சிட்டு எங்கும் பரவச் செய்தமை.

(ரு) ஸ்மார்த்தப் புரோகிதர்கள் பூர்வம் சைவசமயிகளாகவே யிருந்து இடையில் ஸ்மார்த்தசமயப் பிரவேசிகளாக மாறிவிட்ட போதிலும் விபூதி ருத்திராக்கம் சிவாலய சேவை முதலியவைகளை விடாது வேடத்தான் மாத்திரம் சைவசமயிகளைப் போலிருக்கின்றமை யாகிய இவைகளே.

இக்காரணங்களாலாகினும் வேறு எக்காரணத்தாலாகினும் ஆகுக. அநாசாரியரும் அதீக்ஷிதரும், அசைவருமாகிய ஸ்மார்த்தப் புரோகிதர்களைக்கொண்டு நாம் நமது சுபாசுபக் கிரியைகளை நடத்திவருது சர்வாபாசமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை, இல்லை. இங்ஙனங் கூறிய விஷயத்தைப்பற்றி யாருக்கேனுஞ் சந்தேகஞ் செனிக்குமேல் திருவாவடுதுறை, தருமபுரம், திருவண்ணாமலை உமையொரு

பாக முதலிய சைவாதீனங்களிலும், இந்தியா யாழ்ப்பாணத்திலுள்ள சைவசாஸ்திர விற்பன்னர்களிடத்திலும் விசாரித்துத் தெளிந்து கொள்ளலாம்.

இனி, வேறு சிலர் கூறும் ஆக்ஷேபம் ஒன்றுளது. அதாவது அதீக்ஷிதரும், அநாசாரியருமாகிய புரோகிதர்களைக் கொண்டு தீக்ஷிதர்களாகிய சைவர்கள் தங்கள் கிரியைகளை நடத்திக் கொள்ளுதல் தவறென்பது வாஸ்தவந்தான். அதற்காக அவர்களை விலக்கி விடுவோமானால் சைவசமயிகளது கிரியைகள் யாவற்றையும் நடத்துவிப்பதற்கு எவ்வளவு ஆசிரியர்கள் வேண்டுமோ அவ்வளவு சைவாசாரியர்கள் ஆதிசைவர் முதலிய வருணத்துளிருப்பதே துர்லபமென்பதும், அதவா இருந்தபோதிலும் அநேகருக்குக் கிரியை நடத்தும் விதந்தெரியாதென்பதுமேயாம். இஃது அங்கீகரிக்கத் தக்க விஷயமே. ஆனால் இக்குறைவை நாமே தேடிக் கொண்டமையால் மற்றவர்களைக் குறைகூற ஏதுவில்லை. எதனாலெனின்? ஆங்கிலேய அரசினர் நமது தேசத்தைக் கைப்பற்றிய காலத்தில் இங்கிலீஷ் தெரிந்த இந்துக்கள் ஒருவரேனுமுண்டா? இல்லையே. அப்படியிருந்தும் இந்த நிமிஷத்தில் அப்பாஷையை நன்கு கற்றவர்கள் சற்றேறக்குறைய மூன்று கோடிக்கு மதிப்பிட நேர்ந்த காரணம் யாது? இன்ன பரீக்ஷையிற்றேறினவர்களுக்கு இன்ன உத்தியோகமென அரசினர் விதித்த சட்டமேயன்றோ? அதுபோல நாமும் சைவாசாரியர்களில் தக்கவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களுக்குரிய அதிகாரங்களைக் கொடுத்து உபசரிப்போமானால் தெரியாதவர்களும் மிக விரைவிற் சகல கிரியைகளையுஞ் செய்யத் தெரிந்து கொள்வார்களன்றோ? அஃதன்றியும் அவர்கள் சந்ததிகளுக்கும் அதற்கு வேண்டிய கல்விகளை இளமைப் பருவத்திலேயே கற்றுக் கொடுத்து மகா விற்பன்னராக்குவார்கள், அம்மட்டோ? இப்போது தீக்ஷையாதி சைவ சமஸ்காரம் அனாவசியகம், உபநயனாதி வைதிக சமஸ்காரமே போதுமானதென்று கூறும் ஸ்மார்த்தப் புரோகிதர்களும் வரும்படியின் பொருட்டுச் சைவ சமஸ்காரங்களைப் பெற்று மகா சைவராகவும், மகா சைவாசிரியராகவும் ஆகக்கூடுமல்லவா? ஆகையாலே, தக்கவர்களை யுபசரியாமையே மற்றவர்கள் திருந்தாமைக்கு ஏதுவாயிருக்கிறதென்க.

இனி விதியோ விலக்கோ ஆசாரமோ அநாசாரமோ அவையெல்லாங் கவனிக்க வேண்டிய ஆவசியகம் நமக்கில்லை. நமது பிதா நடந்தபடி நாம் நடப்பதுதான் நியாயமெனச் சிலர் கூறுகின்றார்கள். இதனை நியாயமெனக் கொள்ளுங்கால், பிதா கொலை செய்பவனாயிருந்தால்

மகனுங் கொலை செய்ய வேண்டுமென்றும், பிதா களவு செய்பவனு யிருந்தால் மகனுங் களவு செய்ய வேண்டுமென்றும் பிதா கட்குடிப்ப வனுயிருந்தால் மகனுங் கட்குடிக்க வேண்டுமென்றும், பிதாவியபிசாரஞ் செய்பவனுயிருந்தால் மகனும் வியபிசாரஞ் செய்ய வேண்டுமென்றும், பிதா குருத்துரோகியா யிருந்தால் மகனுங் குருத்துரோகியா யிருக்க வேண்டுமென்றும் ஏற்படும்.

அப்படிச் செய்கின்றவன் பஞ்சமா பாதகனென இம்மையிலும் பழிக்கப்பட்டு மறுமையிலும் கொடியநரகத்தை யடைவானென்பது சத்தியமாதலால் அஃது ஒப்பத் தகுந்ததன்று. ஆகையால் நியாய மான வழக்கத்தைப் பிரமாணமாகக் கொள்ள வேண்டியதும், நியாய விரோதமான வழக்கத்தைப் பிரமாணமன்றெனத் தள்ளவேண்டியதுமே விவேகிகள் கடனாதால் வழக்கத்தை ஒரு பொருளென மதியாது நியாயத்தையே மதித்துச் சைவசமயிகளனைவரும் தங்கள் சுபாசுபக் கிரியைகளை அன்னிய சமயிகளைக் கொண்டு நடத்துவதாகிய அசங்கதச் செய்கையை முற்றிலும் விட்டுவிட வேண்டும்.

இனி வேறு சிலர் அப்படிச் செய்வது பிராமணத்துரோகமென் றும், அப்படிச் செய்யும் எம்போலிகளைப் பிராமணத் துரோகிகளென் றுங் கூறிவருகின்றார்கள். இது கலியுக வலியேயாம். எதனாலெனின் அநேக ஜன்ம புண்ணியபலத்தால் உயர்குலத்திற் பிறந்தும் ஈசுரவாக்கி யங்களாகிய சாஸ்திர வரம்புங்கடந்து தங்களுக்குச் சிறிதும் அதிகார மில்லாத சைவக்கிரியைகளை யெல்லாஞ் செய்யத்துணிந்த அப்பிரா மணர்களை அங்ஙனஞ்செய்து நரகுக்கு ஆளாகாவண்ணந் தடுத்து நன் னெறியிலே திருப்பும் எம்போல்வார் பிராமண விஸ்வாசிகளாவதன்றிப் பிராமணத் துரோகிகளாகாமையாலென்க.

இனி இதனை யுய்த்துணருங்கால் ஸ்மார்த்தப் புரோகிதரை அகிர்த் தியத்திற் பிரவேசிக்கத் துணை செய்யுமவர்களே பிராமணத் துரோகி களாவார்களென்பதில் தட்டில்லை. அம்மட்டோ அன்னோர்பால் சமய நெறிக்கு மாறுபட்டுத் தங்கள் கிரியைகளை நடத்துவதாற் சமயத்துரோக மும், சாஸ்திர விதியை அலக்ஷியஞ் செய்வதால் சாஸ்திரத் துரோக மும், ஆசாரியரைக் கொண்டு செய்யவேண்டிய கிரியைகளை அநுசாரி யரைக் கொண்டு செய்து ஆசாரியருக்குச் சேரவேண்டிய பொருளை அநாசாரியருக்குச் சேர்ப்பதாற் குருத்துரோகமும் வந்து சேருமென்ப திலும் ஐயமில்லை. இது நிற்க.

## முடிவுரை

இதுகாறுங் கூறிய நியாய வசனங்களாற் சைவ சமயிகளுடைய சகல கிரியைகளுக்கும் ஆதிசைவப் பிராமணர் முதலிய நால்வருணத்துச் சைவாசிரியர்களே அதிகாரிகளென்பதும், ஸ்மார்த்த, வைஷ்ணவப் புரோகிதர்கள் அதிகாரிகளல்லரென்பதும், தெள்ளிதின் விளங்குமானதால் சைவசமயிகள் அனைவரும் தங்கள் சுபாசுபக்கிரியைகளைச் சைவாசாரியர்களைக் கொண்டே நடத்திவரல் வேண்டும். அதினும் மாமிசபோசன வர்ச்சிதர்களாய் ஒழுகும் வேளாளர் முதலிய சுத்த சைவர்கள் முற்பட்டு நடத்திவரல் வேண்டும். அவருள்ளும் சிவதீக்ஷை சிவபூசையுடையவர்கள் தப்பாது மிக விரைவில் நடத்திவரல் வேண்டும். இந்த உத்தம ஆசாரத்தைச் சைவ மடாதிபதிகளும் சைவ வித்துவான்களும், சைவ ஜமீன்தாரர்களும், சைவப்பத்திராதிபர்களும் சைவப் பிரபுக்களும் முன்னின்று வேண்டும் முயற்சி செய்து எங்கும் பரவச்செய்தல் வேண்டும். அவ்வாறு செய்து சைவசமயத்துக்கும், சைவசமயிகளுக்கும் நேர்ந்திருக்கும் அவமானத்தை நீக்கும்படி அன்னோர்களையும், அவர்களது அறிவுக்கறிவாயிருந்து விளக்கும் சிற்சொரூப சிவபரஞ்சுடரையும் பிரார்த்திக்கின்றோம். சுபம். சுபம்.

---

## தேவார வைப்புத்தல விளக்கம்

(7-வது பக்கத் தொடர்ச்சி.)

### 31-பிறம்பில்-என்பது-பிறம்பூர்.

**திருநாவுக்கரசுநாயனர் அருளிய க்ஷேத்திரக்கோவை.**

திருச்சிற்றம்பலம்.

மண்ணிப்படிக்கரைவாளொளியுத்தூர்வக்கரைமந்தாரம் வாரணசி, வெண்ணிவிளத் தொட்டிவேள்விக்குடி விளமர்விராடபுரம் வேட்களத்தும், பெண்ணையருட்டுறைதண் பெண்ணாகடம்பிறம்பில்பெரும்புலியூர் பெருவேளூரும், கண்ணைகளாக்காறை கழிப்பாலையுங் கயிலாய நாதனையே காணலாமே.

**திருச்சிற்றம்பலம்**

இத்தலம் குமாரக்கடவுளாலயமாய் இக்காலத்து விளங்கிவருகின்றது. சிவபெருமானும் பார்வதிதேவியாரும் அக்கோயிலுக்குள்ளிருக்கின்றனர். பெரிய வூராகவும், ரதோற்சவ முதலியனவுங் காவடி முதலிய

சிறப்பும் நடந்தேறி வருகின்றன. சுவாமிபெயர் குமாரக்கடவுள். அம்பிகை தெய்வயானை, வள்ளியம்மை. இது மங்கநல்லூர் ரயில் ஸ்டேஷனுக்கு 5-மைலிலுள்ளது.

## 32-வது பூந்துறை-என்பது-சிந்துபூந்துறை

### திருநாவுக்கரசுநாயனர் அருளிய அடைவு திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்.

கயிலாயமலையெடுத்தான்கரங்களோடுசிரங்களுர நெரியக்கால்விரலாற் செற்றோன், பயில்வாயபராய்த்துறைதென் பாலைத்துறைபண்டெழுவர் தவத்துறைவெண்டுறைபைம்பொழிற்,குயிலாலந்துறைசோற்றுத்துறைபூந் துறைபெருந்துறையுங் குரங்காடுதுறையினோடு, மயிலாடுதுறைகடம்பந் துறையாவடுதுறைமற்றுந்துறையனைத்தும் வணங்குவோமே.

இத்தலம் குமாரக்கடவுளாலயமாய் தாமிரவர்ணி ஜலமத்தியிலுள்ளது. சுவாமிபெயர் குமாரக்கடவுள். அம்பிகை தெய்வயானை, வள்ளியம்மை. இது திருநெல்வேலி பிரிட்ஜ் ரயில் ஸ்டேஷனுக்கு 1-மைலி தூரத்திலுள்ளது.

## 33-வது கந்தமாதனம்-என்பது-திருச்செந்தூர்.

### திருநாவுக்கரசுநாயனர் அருளிய திருவீழிமிழலைத் திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கயிலாயமலையுளார்காரோணத்தார்கந்தமாதனத்துளார்காளத்தியார்
மயிலாடுதுறையுளார்மாகாளத்தார்வக்கரையார்சக்கரமாற்கீந்தார்வாய்ந்த
அயில்வாயசூலமுங்காபாலமுமமருந்திருக்கரத்தாரானேறேறி
வெயிலாயசோதிவிளங்குநீற்றார்வீழிமிழலையேமேவினாரே.

திருச்சிற்றம்பலம்.

### திருமறைக்காடு திருத்தாண்டகம்.

திருச்சிற்றம்பலம்.

கள்ளிமுதுகாட்டிலாடிகண்டாய்காலனையுங்காலாற் கடந்தான்கண்டாய், புள்ளியுழைமானின்றோலான்கண்டாய்புலியுரிசேராடைப்புனிதன் கண்டாய், வெள்ளிமிளிர்பிறைமேற்சூடிகண்டாய் வெண்ணீற்றான்கண்டாய் நஞ்செந்தின்மேய, வள்ளிமணாளற்குத்தாதைகண்டாய்மறைக்காட்டுறையுமணாளன்றானே.

திருச்சிற்றம்பலம்.

இத்தலம் குமாரக்கடவுள் முக்கியஸ்தலங்களில் ஒன்றாக விளங்குகின்றது. இதுவே கந்தமாதனமெனப்படும். சுவாமிபெயர் கந்த

ஸ்வாமி, அம்பிகைவள்ளிநாச்சியார், தெய்வயானையம்மை தீர்த்தம் வேலாயுதக்கூவமும் வதனாரம்ப முதலிய சமுத்திர கட்டங்களும் சிறந்தன. சிலர் சிவபெருமானையும் குமாரக்கடவுளையும் பிதாவும் புத்திரனுமென வேறு பிரித்துக் கூறுவாரெனினும் அவ்வாறு கொள்ளாது, ஈசானாதி ஐம்முகங்களோடு கூடிய சிவபிரானே தமது அதோமுகமுங் கூட்டி அறுமுகச்சிவனாக விளங்கும் அவசரம் ஷண்முகமூர்த்தமென்பது வேதாகமாதிகளின் சம்மதம்.

சிவமூர்த்தங்கள் பலவற்றுள்ளும் சோமாஸ்கந்த மூர்த்தமே எல்லாத்தலங்களிலும் முக்கியமாயுள்ளதும், ரிஷபாரூட ரதாரூடங்களில் உற்சவ கோலங் கொள்வதும், இரவில் உற்சவவைபவாதிகளால் நெடுநேரமாயினும் சந்நிதியடைந்த பின்னரே அர்த்தயாம பூஜை நடத்தப்படுவதும், அம்மூர்த்தம் ஆலயத்திலிருக்கையிலேயே திருச்சந்நிதியைப் பிரதக்ஷிண நமஸ்காராதிகள் செய்வதுமாம்.

உமையோடும் ஸ்கந்தரோடுங் கூடிய கடவுளென்பது சத்தாகிய சிவமும், சித்தாகிய உமையும் ; ஆநந்தமாகிய குமாரனுங்கூடியதுசோமாஸ்கந்த மூர்த்தம். இம்மூர்த்தமே மகாகயிலாயத்திலும் உள்ளதாக ஸ்காந்த முதலிய நூல்களால் விளங்குகின்றது. ஆகலின் சிவபெருமானுக்கும் குமாரக்கடவுளுக்கும் வேறுபாடில்லை. அங்ஙனமின்றி கருதுவோர்கள் சிவம்பெரிதென்றும் சத்திபெரிதென்றும் வாதிட்டுக் கழுக்களாகி திருக்கழுக்குன்றத்தில் வழிபட்ட மாகுத்தன் சம்புகுத்தன்போல அபராதிகளாவார்கள். இது திருநெல்வேலி பிரிட்ஜ் ரயில் ஸ்டேஷனுக்கு 34-மைலிலுள்ளது.

* சிவபக்திமான்களாயுள்ளவர்கள் திருநெல்வேலிக்குச் சென்று சிந்து பூந்துறையை தரிசியாமலும், தஞ்சாவூர் போகிறவர்கள் கருந்தட்டாங்குடி போகாமலும், கும்பகோணம் போகிறவர்கள் சோமீச்சுரம் போகாமலும், மாயூரத்திற்கு போகிறவர்கள் நல்லத்துக்குடி போகாமலும், சீகாழிக்கு போகிறவர்கள் நாகேச்சுரம் போகாமலும், திருக்கச்சூருக்குப் போகிறவர்கள் மலைக்கோயிலெனும் ஆலக்கோயிலுக்குப் போகாமலும் திரும்பி வந்து விடுகிறார்கள்.

(இன்னும் வரும்.)

---

* இவ்விஷயம் கவனிக்கற்பாலது.

## "என் கடன் பணிசெய்து கிடப்பதே"

என்னும் திருநாவுக்கரசு சுவாமிகள் வேதவாக்கையே தன் பெயராகக்கொண்ட இந்நூல் முன் "தேசபக்தன்" ஆசிரியராயிருந்தவரும், இப்போது "நவசக்தி" ஆசிரியராயிருப்பவரும், உத்தம தேசாபிமானியுமாகிய ஸ்ரீமான் திரு வி. கலியாணசுந்தர முதலியாரவர்களால் எழுதப்பட்டு சமீபத்தில் வெளிவந்துள்ளது இது என்-கடன்-பணி-செய்து கிடப்பதே என்னும் நான்கு அதிகாரணங்களாக வகுக்கப்பெற்று, தேசப்பணியே கடவுட்பணியும் உயிர்ப்பணியுமாம் என்பதனை பல முகத்தால் எடுத்து நன்கு விளக்குகின்றது. தேசாபி விருத்திக்கான விஷயங்கள் பல மனிதரின் ஆன்மலாபத்தோடு ஒற்றுமைப்பட்டிருப்பதை மிகவும் தெளிவாயெடுத்துக் காட்டுகின்றது. இதனை வாசிப்பவர் எவரும் தேசத் தொண்டில் தலை சிறப்பரென்பது ஒரு தலை.

இதன் விலை அணா எட்டு. வேண்டுவோர் சென்னை, இராயப்பேட்டை "நவசக்தி" புத்தகசாலை மானேஜருக்கு ஒன்பது அணா ஸ்டாம்பு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். (சைவம்-ப-ர்.)

---

## வட திருமுல்லைவாயில் வசந்த மகோற்சவம்.

நிகழும் துந்துபி௵ வைகாசிமீ 29௳ (11-6-22) ஆதிவாரம், வட திருமுல்லைவாயிலில், கொடியிடையம்மை பங்கரும், பாசுபதா பரஞ்சுடருமாகிய மாசிலாமணீசுவராருக்கு, காலையில் உருத்திராபிடேகாதியுபசாரங்களும், இரவில் வசந்த மகோற்சவமும், இடையில் உழவாரத் திருப்பணி, தமிழ் வேதபாராயணம், சைவப்பிரசங்கம், மாகேசுரபூசை முதலியனவும் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் நடத்தப்பெற்றன. சிவனடியார்கள் எண்ணிறந்தோர் சென்று குழாம் புகுந்து ஈசர்க்காட்செய் தின்புற்றார்கள்.

---

## நன்கொடை

இவ்வருடம் வடதிருமுல்லைவாயில் வசந்தோற்சவத்தை மிகச் சிறப்பாய் நடத்தும்பொருட்டு மாண்டலே முனிசிபல் இஞ்ஜினிரிங் ஆபீசு ஹெட்ட்ராப்ட்ஸ்மன் ஸ்ரீமான். சு. சுப்பராய முதலியாரவர்கள் சென்னைச்சிவனடியார் திருக்கூட்டத்திற்கு 100 (நூறு) ரூபா அனுப்பிப் பேருபகாரஞ் செய்தார்கள். இதனால் இவ்வருடம் முன் வருடத்தினும் பன்மடங்கு சிறப்பாக மகோற்சவம் மாகேசுரபூசை முதலியன நடைபெற்றன.

உ

சிவமயம்.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் வெளியிட்டுள்ள நூல்கள்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| "சைவம்" என்னும் மாதாந்தரப் பத்திரிகை (1915ஆ முதல் 1919ஆ வரையில் வெளிவந்தவை.) | | | | |
| காலிகோ கட்டடம் செய்தது | விலை | 6 | 0 | 6 |
| ஒவ்வொரு வருடப் பத்திரிகை | | 1 | 8 | 6 |
| "சைவம்" நிகழும் வருடப் பத்திரிகை வருடச்சந்தா | | 1 | 8 | 0 |
| ஞானப்பிரகாச சம்பாஷணை | | 0 | 1 | 0 |
| ஞானானந்த சம்பாஷணை | | 0 | 0 | 0 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | | 0 | 0 | 6 |
| விவாகவிதியும் கலியுக தருமமும் | | 0 | 0 | 6 |
| சைவ சமயிகளின் கடமை | | 0 | 1 | 6 |
| கோபப் பிரசாத உரை | | 0 | 1 | 6 |
| சிவநின்மாலிய மான்மியம் | | 0 | 0 | 0 |
| திருமுறைப் பெருமை | | 0 | 4 | 6 |

---

## பித்தவாயு லேக்கியம்

நெய் முதலிய பொருள்களின் விலையேற்றத்தையும் இதைச் சித்தப்படுத்துவதனால் நேரிடும் அதிக பிரயாசையையும் நோக்கி இடையில் சிலகாலமாக இந்த லேக்கிய விற்பனை நிறுத்தி வைக்கப் பட்டது. இதனையுண்டு குணமடையப் பெற்றவர்கள் பலர் அடிக்கடி வேண்டிக் கொள்வதனால் இது மறுபடியும் விற்பனைக்குச் சித்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதை உபயோகித்து வருபவர்களுக்குப் பித்தவாயுவால் உண்டாகும் எவ்வகைப்பட்ட நோய்களும் அணுகா. ஜீரணசக்தி உண்டாம். சரீர புஷ்டியும் பலமும் உண்டாகும். இதுவே உண்மையான தாதுபுஷ்டி மருந்துமாம். வாய்க்கு ருசியாகவும் இருக்கும். பத்தியம் கட்டாயமல்ல. இச்சாபத்தியமிருந்தால் பின்னும் உத்தமம். சிறு பிள்ளைகள் சாப்பிட்டு வந்தால் அடிக்கடி வைத்தியரிடம் போக நேரிடாது. 20 வேளை சாப்பிடக்கூடிய மருந்தின் விலை ரூபா 2. வி. பி. தபாலில் அனுப்பினால் ரூபா 2—4—0.

இலங்கையில் இங்கிருந்து போகும் மருந்துக்கு அதிக வரி விதிப்பதனால் மணியார்டர் மூலமாக முன்பணம் அனுப்புவோர்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு இந்த லேகியம் அனுப்பப் படும்.

# தமிழகம்.

மலாய் நாட்டிற்கு ஒரே தமிழ்ப் பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய் பிரதி புதன் சனிக்கிழமைகள் தோறும் வெளிவருகிறது. நம் 'தமிழ் நாட்டிலிருந்து பினங் சிங்கப்பூர் மலாகா முதலிய பிரதேசங்களை உளப்படுத்திய மலாய் நாட்டில் குடியேறவும் பிழைப்புக்காகவும் வந்திருக்கும் தமிழ் ஜனங்களின் நன்மைகளைக் கருதியும் உரிமைகளைக் காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இது ஐக்கியமலாய் நாட்டிலுள்ள கோலாலம்பூர் பத்து ரோட்டில் 186, 188, 190-ம் நெம்பர் கட்டடங்களில் அமைக்கப் பெற்றிருக்கும் இண்டஸ்திரியல் அச்சுக்கூட ஸ்வான்தாரர் ஸ்ரீமான் சி. செல்லத்தம்பி அவர்களால் தேர்ந்த தமிழறிவாளிகளைக் கொண்டு நடத்தப்படுவது. இஃது மலாய் நாடு, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுகின்றது. இதன் வருட சந்தா றிங்கி 10.00 ஆறுமாதத்திற்கு றிங்கி 5. 50 மூன்று மாதத்திற்கு றிங்கி 3. 00. இந்தியா, பர்மா, இலங்கை நாடுகளுக்கு வருட சந்தா ரூபாய் 15. ஆறுமாதங்களுக்கு ரூபாய் 8 நீடித்த விளம்பரங்கள் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர் "தமிழகம்" ஆபீஸ்,
நெம்பர் 190, பத்து ரோட்,
கோலாலம்பூர்.

---

## வேண்டுகோள்.

சந்தாதாரர்கள் அனுப்பும் சந்தாத் தொகைகளைக்கொண்டே இப்பத்திரிகை நடைபெறவேண்டி யிருப்பதனாலும், இத்தமிழ் நாட்டில் நடைபெறும் சைவப்பத்திரிகை இது ஒன்றேயா யிருத்தலாலும், பத்திரிகை சைவசமயாபி விருத்திக்கு இன்றியமையாத கருவியா யிருப்பதனாலும், சுயப்பிரயோசனம் சிறிதும் இன்றிப் பொதுநலங் கருதியே இது வெளியிடப்படுதலாலும், சைவர்கள் ஒவ்வொருவரையும் இப்பத்திரிகைக்குச் சந்தாதாரர்களாகச் சேர்த்துபகரிக்கும்படி சந்தாதாரர்களை மிகவும் பிரார்த்திக்கின்றோம்.

பத்திராதிபர்.

Printed at the Sadhu Press, Royapettah and Published by I. Authimoola Mudaliar, G. T. Madras.